**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 311/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.3 |
| Name | : | மருத்துவர் சிவராமன் |
| Father's/Husband Name: | | துரைசாமி |
| Village | : | ஆத்தூர் |
| Taluk | : | ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் |
| Age | : | 35/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 2 ஆஜர், எதிரி 1 ஆஜர் இல்லை. அவருக்கு 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்துள்ளார்)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 27.09.2017 அன்று மாலை 4.30 மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது செல்லம்மாள் (75) க.பெ கிருஷ்ணன் என்பவர் அவரது பேத்தி ஆனந்தி என்பவர் மூலமாக சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்த போது அவரை தெரிந்த 3 நபர்கள் 24.09.2017 மாலை 4.30 மணிக்கு அவருடைய வீட்டின் அருகில் குச்சி மற்றும் கைகளால் தாக்கப்பட்டதாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வெளிகாயங்கள் ஏதும் இல்லை. அவரை உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என நான் சான்றளித்தேன். செல்லம்மாளுக்கு நான் வழங்கிய **காயச்சான்றிடன் கூடிய விபத்து பதிவேடு** அ.சா.ஆ1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

செல்லம்மாள் என்பவர் சிகிச்சைக்கு வரும்போது கடந்த 24.09.2017 அன்று 3 நபர்கள் தன்னை தாக்கியதாக கூறி என்னிடம் சிகிச்சைக்கு 3 நாட்கள் கழித்து 27.09.2017 அன்று வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு ஏற்பட்ட காயம் புதிய காயம் மற்றும் பழைய காயம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவருக்கு வெளிப்புற காயம் ஏதும் காணப்படவில்லை என்பதால் நான் குறிப்பிடவில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.